காஞ்சிபுரம் பெருநகராட்சி
கூட்ட எண்.**1 / 2019-20**

**2019-**ம் ஆண்டு மே மாதம் **31-**ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை **4.00** மணிக்கு
நடந்த சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.

முன்னிலை
திரு.கா. மகேந்திரன்**,** பி.இ.**,**
தனி அலுவலர்

**1.** காஞ்சிபுரம் பெருநகராட்சி ஆணையாளர் (பொ) மற்றும் நகராட்சி பொறியர் அவர்களின் ஏப்ரல் 2019 மற்றும் மே 2019 மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்hவைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண்:- 1 பதிவு செய்யப்பட்டது.

2. காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ தேவராஜ சுவாமி திருக்கோயிலில் 40 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறவுள்ள அருள்மிகு அத்திவரதர் சுவாமி வைபவ திருவிழா 01.07.2019 முதல் 17.08.2019 வரை நடைபெற உள்ளதை முன்னிட்டு தமிழ்நாடு, வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளிலிருந்தும் பெருமளவு திரளான மக்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே திருவிழாவில் கலந்துகொள்ள வருகை தரும் பொது மக்களின் நலன் கருதி நகரில் ஆங்காங்கே தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொள்வது சம்பந்தமாக முதன்மை செயலாளர்/ ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 04.06.2019 அன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் துறை வாரியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து அறிவுரைகள் வழங்கி ஆய்வுக்கூட்ட அறிக்கையில் நடவடிக்கை மேற்கொளள அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

இவ்வாய்வுக் கூட்ட அறிக்கையில் 1. சாலைகள் பழுது பார்த்தல், 2. கோயிலைச் சுற்றியுள்ள நான்கு மாட வீதிகளிலுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றுதல், குடிநீர் வசதி மற்றும் தற்காலிக பேருந்து நிலையம், கார் மற்றும் வேன் நிறுத்துமிடங்கள் அமைத்தல், 3. குப்பைகள் அகற்றுதல், பேருந்து நிறுத்தங்கள் கட்டமைப்பு, குப்பை தொட்டிகள் அமைத்தல், 4. தற்காலிக கழிப்பறைகள் (Mobile Toilet) அமைத்தல், 5. ஒருங்கிணைந்த சுகாதார பணிகள் (Mass Cleaning), 6. சுகாதார பணிகளுக்கு தேவையான பொருட்கள் இருப்பு வைத்தல், 7. சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்பேரில் பொது சுகாதார பணிக்கு தேவையான கிருமிநாசினி, சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர், தளவாட பொருட்கள், குப்பை தொட்டிகள், கூடுதல் துப்புரவு வாகனங்கள், கூடுதல் துப்புரவு பணியாளர்கள் ஆகியவை இவ்விழாவிற்கு 48 நாள்கள் பயன்படுத்துவதற்கு மதிப்பீட்டு விவரம் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் வசதி, Mobile Toilet அமைத்தல், கோயிலின் உட்புறம், வெளிப்புறம் மற்றும் முக்கிய இடங்களில் RO குடிநீர் நிலையம் அமைத்தல், தற்காலிக கார் மற்றும் வேன் நிறுத்துமிடங்கள் அமைத்து அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல், அறிவிப்பு பலகைகள் அமைத்தல், 100 இடங்களில் 2000 லிட்டர் கொள்ளவுள்ள HDPE தொட்டிகள் அமைத்தல், 20 தனியார் லாரிகள் மூலம் 100 இடங்களில் அமைக்கப்படவுள்ள HDPE குடிநீர் தொட்டிகளில் குடிநீர் நிரப்புதல் மற்றும் நடமாடும் கழிப்பிடங்களுக்கு தண்ணீர் வசதி செய்தல் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வேலூர் திட்டத்திலிருந்து 2.00 MLD குடிநீர் கூடுதலாக காஞ்சிபுரம் நகராட்சிக்கு பெறுவதற்கு குடிநீர் வாரியத்திற்கு குடிநீர் கட்டணம் செலுத்துவதற்கும் போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டி உள்ளது.

அதன்பேரில் 01.07.2019 முதல் 17.08.2019 வரை 48 நாட்களுக்கு நடைபெற உள்ள அத்திவரதர் வைபவத் திருவிழாவினை முன்னிட்டு, இத்திருவிழாவிற்கு வருகை தரும் பொது மக்களின் நலன் கருதி போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணிகளுக்கான உத்தேச செலவின மதிப்பீட்டு விவரம் பின்வருமாறு.

I –பொது சுகாதார பணிகள் (Public Health Activities)

| Sl. No. | Items | Required Quantity | Estimate cost (Rs. in Lakhs) |
|---|---|---|---|
| 1 | Slacked Lime | 250 MT | 30.00 |

| | | | |
|---|---|---|---|
| 2 | Baskets | 600 Nos. | 3.42 |
| 3 | Hand Shawal | 600 Nos. | 2.82 |
| 4 | Garden Brooms | 600 Nos. | 2.76 |
| 5 | Coconut Brooms | 2000 Nos. | 1.26 |
| 6 | Scrappers | 600 Nos. | 2.89 |
| 7 | Bleaching powder | 300 MT | 120.00 |
| 8 | Phenyl | 1500 Ltrs. | 7.50 |
| 9 | Spade | 200 Nos. | 1.00 |
| 10 | Picouss | 200 Nos. | 1.36 |
| 11 | Crow bar | 100 Nos. | 0.75 |
| 12 | Glows | 2000 Pair | 8.00 |
| 13 | Mask | 2000 Nos. | 6.00 |
| 14 | Combute | 1000 Nos. | 8.50 |
| 15 | Cap | 1500 Nos. | 2.25 |
| 16 | Reflected Jacket | 1000 Nos. | 5.80 |
| 17 | Chlorine Kit | 50 Nos. | 0.50 |
| 18 | OT Solution | 20 Ltrs. | 0.10 |
| 19 | First Aid Kit Box | 100 Nos. | 0.50 |
| 20 | Sanitary worker wages<br>(800 x Rs.524 x 55 days) | Per day Rs.4,19,200/- | 230.56 |
| 21 | IEC Activities | - | 5.00 |
| | **Sub Total – I** | | **440.97** |

II –பொறியியல் பிரிவு பணிகள் (Basic Amenities work for Public)

| S. No. | Item of works | Estimate cost (Rs in Lakhs) |
|---|---|---|
| 1 | Installation of Mobile Toilet for Men and Women with Water Supply arrangements in Temple premises and important public places in Kancheepuram Town limit (100 Seats) | 20.00 |
| 2 | Installation of New RO Plant for Drinking Water facilities (10 Nos.) | 50.00 |
| 3 | Water supply through Private Lorries (20 Nos.) | 50.00 |
| 4 | Providing 2000 Ltrs. HDPE Tank with stand for drinking water facilities in Temple area and important public places.(100 Nos.) | 20.00 |
| 5 | Installation of proper Signage Boards. | 10.00 |
| 6 | 2.00 MLD Drinking Water received from TWAD Board Vellore Scheme<br>(2000 KL x Rs.150 / KL x 60 days) | 180.00 |
| 7 | Provision for Pipe line Inter connection works of TWAD Pumping main to Thirupparkadal Stand Post. | 15.00 |
| 8 | Providing Temporary Car & Van Parking leveling the existing surface and providing basic amenities at 3 Locations. (Thiruveethipallam, Pachaiyappa's Mens Collge, Tollgate near Jeeyar Madam site) | 40.00 |
| 9 | Providing Mobile Toilet, Drinking facilities, Lighting arrangements @ Orikkai, Lalapettai & Pachaiyappa's Mens Collge Temporary Bus Stands. | 30.00 |
| **Sub Total – II** | | **415.00** |
| | **Grand Total** | **855.97** |

எனவே அருள்மிகு அத்திவரதர் சுவாமி வைபவ திருவிழாவிற்கு வருகை தரும் பொது மக்களுக்கு தேவையான மேற்குறிப்பிடப்பட்ட அத்தியாவசிய பணிகளை மேற்கொள்வதற்கான செலவினத்திற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.855.97 இலட்சங்களை அரசின் திட்ட நிதியிலிருந்தோ அல்லது நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளத்தக்க வகையில் மன்றத்தின் நிர்வாக அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

1.பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மேற்படி செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்படி பணிக்காக அரசின் நிதி ஒதுக்கீடு ஏதேனும் பெறப்படின் இத்தொகையினை பொது நிதியில் ஈடுசெய்துக் கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.4829/2019/இ1)

தீர்மானம் எண்:- 2 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

3. காஞ்சிபுரம் பெரு நகராட்சியில் 2018-2019 ஆம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.2268/2018/சி1)

தீர்மானம் எண்:- 3 பதிவு செய்யப்பட்டது.

4. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் உள்ளாட்சி தேர்தல் 2019 தொடர்பான தேர்தல் பணிகள் கணினியில் மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளது. எனவே தேர்தல் பணிகள் மற்றும் இதர Data Entry பணிகளை மேற்கொள்ளவும், உதவி கணினி திட்டமிடுபவருக்கு உதவியாக கணினியில் பணிகள் மேற்கொள்ளவும், நிர்வாக நலன் கருதி ஒரு நபர் னுயவய Data Entry Operator 89 நாட்களுக்கு மட்டும் நியமனம் செய்துக்கொள்ளவும், அதற்கான தினக்கூலி மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் அவர்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை விகிதத்தின்படி நாள் ஒன்றுக்கு ரூ.415/- வீதம் 89 நாட்களுக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.38,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண்:- 4 அனுமதி அளிக்கப்பட்டது.

5. காஞ்சிபுரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள வாகனங்களுக்கு போதிய நிரந்தர ஓட்டுநர் பணியிடங்கள் இல்லாமையால் தற்காலிகமாக தனியார் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர்களை பணியமர்த்திக்கொள்ள 06.08.2017ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது.

அதனடிப்படையில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர். Saffari Association, Kancheepuram நிறுவனத்திற்கு 7 எண்ணிக்கை ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் அனுப்ப பணியாணை வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 19.05.2019 உடன் முடிவடைகிறது. எனவே பழைய ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே 7 ஓட்டுநர்களை வைத்துக்கொள்ள 21.05.2019 முதல் தொடர்ந்து 89 நாட்களுக்கு காலநீட்டிப்பு வழங்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.4.50 இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கெள்ளவு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு.

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.3127/2017/எச்1)

தீர்மானம் எண்:- 5 அனுமதி அளிக்கப்பட்டது.

6. காஞ்சிபுரம் பெருநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு துhய்மை இந்தியா திட்டத்தின்கீழ் நான்கு காம்பக்டர் வாகனங்கள் முறையே TN 21 BC 3727, TN 21 BC 3749, TN 21 BC 3261, TN 21 BC 3290 ஆகியவை வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேற்படி வாகனங்களை அதன் தயாரிப்பு நிறுவனமான திருவாளர். காம் அவிடா என்விரோ என்ஜினியர்ஸ் (பி) லிட், புனே என்ற நிறுவனத்தாருக்கு இந்நகரமன்ற தீர்மான எண். 107, நாள். 04.06.2012ன் விலை விகிதப்படி இயக்கி பராமரிக்க பணி உத்தரவு வழங்கப்பட்டு நாளது தேதி வரை (தீர்மான எண்.468 நாள். 31.12.2018 ன்படி 31.03.2019 உடன் முடிவடைகிறது ) கால நீட்டிப்பு செய்து ஒப்பந்த காலம் நடைமுறையில் உள்ளது.

தற்போது மேற்படி ஒப்பந்த காலம் முடிவடைவதால் போதிய நிரந்தரப் பணியாளர்கள் இல்லாத நிலையில் மேற்படி வாகன பராமரிப்பு பணிக்காலத்தினை மேலும் 3 மாதங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் விலைவிதப்படி வாகனம் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.3295 / - வீதம் (எரிபொருள், வாகன ஓட்டுநர் கூலி மற்றும் பராமரிப்பு செலவுகள் உட்பட) ஏற்கனவே பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் நிறுவனமான திருவாளர் காம்-அவிடா என்விரோ என்ஜினியர்ஸ் (பி) லிட், புனே நிறுவனத்தின் மூலம் இயக்கு பராமரிப்பதற்கும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.20,00,000 / - ( ரூபாய் இருபது இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. தற்போது பாராளுமன்ற தேர்தல் விதிகள் நடைமுறையில் உள்ளதால், மேற்படி பணியினை தொடர்ந்து செய்து வர இந்நகரமன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு

1.மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2.பொதுசுகாதார பயின் அவசர அவசியம் கருதி இப்பணியினை ஏற்கனவே பரரிமரித்து வரும் நிறுவனமான திருவாளர் காம்-அவிடா என்விரோ என்ஜினியர்ஸ் (பி) லிட், புனே நிறுவனத்திற்கு

ஏற்கனவே ஒப்புதல் அளித்த விலை விகிதத்தின் அடிப்படையில் பணியை ஒப்படைப்பதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3.நகரமான்ற அனுமதியை எதிர் நோக்கி மேலும் 3 மாத காலத்திற்கு தொடர்ந்து நீடித்து வைத்து கொள்ளவும் அதற்கான செலவினத்துக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

( ந.க.எண்.9316/15/எச்1)

தீர்மானம் எண்:- 6 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

7. காஞ்சிபுரம் பெருநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தற்சமயம் பயன்பாட்டில் உள்ள ஹுக்லோடர் லாரி எண். TN 21 AM 8082 ஐ அதன் பராமரிப்பு நிறுவனமான திருவாளர் காம்-அவிடா என்விரோ என்ஜினியர்ஸ் (பி) லிட், புனே நிறுவனம் இந்நகரமன்ற தீர்மான எண்.108, நாள். 04.6.2012ன்படி கீழ்கண்ட விலை விகிதத்தில் (வாகனம் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ஆகும் எரிபொருள், வாகன ஓட்டுநர், ஆபரோட்டர், கூலி மற்றும் பராமரிப்பு செலவுகள் உட்பட) பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

TN 21 AM 8082 ஹுக்லோடர் ரூ.4097.85

தற்போது மேற்படி வாகனத்தின் பராமரிப்பு காலம் நகரமன்ற தீர்மான எண்.469 / 31.12.2018 ன்படி 31.03.2019 அன்றுடன் முடிவடைகிறது. எனவே இவ்வாகனத்தை இயக்க நகராட்சியில் போதிய நிரந்தரப் பணியாளர்கள் இல்லாத நிலையில் பொதுசுகாதாரப் பணிகள் தடையில்லாமல் நடைபெறவும், அவசர அவசியம் கருதி ஏற்கனவே பராமரித்து இயக்கி வரும் நிறுவனமான திருவாளர் காம்-அவிடா என்விரோ என்ஜினியர்ஸ் (பி) லிட், புனே, என்ற நிறுவனத்தால் மேலும் 3 மாதங்களுக்கு ஏற்கனவே இயக்கி பராமரிக்கும் விலை வீதத்திலேயே இயக்கி பராமரிக்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.6.00 (ஆறு இலட்சம் மட்டும்) இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. தற்போது பாராளுமன்ற தேர்தல் விதிகள் நடைமுறையில் உள்ளதால், மேற்படி பணியினை தொடர்ந்து செய்து வர இந்நகரமன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு

1.மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2.பொதுசுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி இப்பணியினை ஏற்கனவே பரரிமரித்து வரும் நிறுவனமான திருவாளர் காம்-அவிடா என்விரோ என்ஜினியர்ஸ் (பி) லிட், புனே நிறுவனத்திற்கு ஏற்கனவே ஒப்புதல் அளித்த விலை விகிதத்தின் அடிப்படையில் பணியை ஒப்படைப்பதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3. நகரமான்ற அனுமதியை எதிர் நோக்கி மேலும் 3 மாத காலத்திற்கு தொடர்ந்து நீடித்து வைத்து கொள்ளவும் அதற்கான செலவினத்துக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்

(ந.க.எண்.9316/15/எச்1 )

தீர்மானம் எண்:- 7 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

8. காஞ்சிபுரம் பெருநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தற்சமயம் பயன்பாட்டில் உள்ள கீழ்கண்ட வாகனங்களை அதன் பராமரிப்பு நிறுவனமான திருவாளர் காம்-அவிடா என்விரோ என்ஜினியர்ஸ் (பி) லிட், புனே நிறுவனம் இந்நகரமன்ற தீர்மான எண்.435, நாள். 31.01.2012ன்படி கீழ்கண்ட விலை விகிதத்தில் (வாகனம் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ஆகும் எரிபொருள், வாகன ஓட்டுநர், ஆபரோட்டர், கூலி மற்றும் பராமரிப்பு செலவுகள் உட்பட) பராமரிக்கப்பட்டு வந்தது.

TN 21 AM 3292 ( Mini Compactor )
TN 21 AM 3216 ( Mini Compactor )
TN 21 AM 3294 (14 Cum Compactor)

தற்போது மேற்படி வாகனங்களின் பராமரிப்பு காலம் நகரமன்ற தீர்மான எண்.279 / 28.09.2018 ன்படி 20.05.2019 அன்றுடன் முடிவடைந்தது. எனவே இவ்வாகனத்தை இயக்க நகராட்சியில் போதிய நிரந்தரப் பணியாளர்கள் யாரும் இல்லாத நிலையில் பொதுசுகாதாரப் பணிகள் தடையில்லாமல் நடைபெறவும், அவசர அவசியம் கருதி ஏற்கனவே பராமரித்து இயக்கி வரும் நிறுவனமான திருவாளர் காம்-அவிடா என்விரோ என்ஜினியர்ஸ் (பி) லிட், புனே, என்ற நிறுவனத்தால் மேலும் 21.05.2019 முதல் 30.09.2019 வரை ஏற்கனவே இயக்கி பராமரிக்கும் விலை வீதத்திலேயே இயக்கி பராமரிக்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ. 20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பொதுசுகாதார பயின் அவசர அவசியம் கருதி இப்பணியினை ஏற்கனவே பரரிமரித்து வரும் நிறுவனமான திருவாளர் காம்-அவிடா என்விரோ என்ஜினியர்ஸ் (பி) லிட், புனே நிறுவனத்திற்கு ஏற்கனவே ஒப்புதல் அளித்த விலை விகிதத்தின் அடிப்படையில் பணியை ஒப்படைப்பதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3. இப்பணிக்காகும் தொகையினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

( ந.க.எண்.8155 /20 12 / எச்1)

தீர்மானம் எண்:- 8 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

9. காஞ்சிபுரம் நகராட்சி 51 வார்டுகளைக் கொண்ட பெருநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. நகரப் பகுதியில் உள்ள மக்கள் தொகையுடன் மேலும் நகரப் பகுதிக்கு வந்து செல்லும் மக்கள் தொகையால் பொதுசுகாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாலும், தற்போது வரவிருக்கும் பருவ மழைக் காலங்களில் ஏற்படும் டெங்கு, சிக்கன் குனியா போன்ற நோய் தொற்றுகளை தடுக்க வீடு வீடாக சென்று ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளவும், தடுப்பு நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுக்கவும் நகரமன்ற தீர்மான எண். 297 / 31.10.2017ன்படி 157 டெங்கு நோய் தடுப்பு பணியாளர்கள் (D B C) பயன்படுத்தப்பட்டும் பின்னர் நகரமன்ற தீர்மான எண். 164 / 31.07.2018-ன்படி கூடுதலாக 43 பணியாளர்களும் அமர்த்திக் கொள்ள ஒப்புதல் பெறப்பட்டு அவர்களுக்கான செலவினம் நகராட்சி நிதியிலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் விலை விகித அடிப்படையில் வழங்கப்பட்டு வரப்படுகிறது.

மேற்படி டெங்கு நோய் தடுப்பு பணியாளர்கள் தொடர்ந்து வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட நகரமன்ற தீர்மான எண்.655/நாள்.28.02.2019ன் படி 30.04.2019 உடன் காலம் முடிவடைவதாலும் பெருகி வரும் வசிப்பிடப் பகுதிகளில் போதிய பணிகள் மேற்கொள்ள அவசிய தேவை என்பதால் 01.05.2019 முதல் மேலும் 89 நாட்களுக்கு வைத்து பணி மேற்கொள்ளவும், மாவட்ட ஆட்சித்தலைவர் விலை விகிதத்தில் தினக்கூலி வழங்கவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 36.00 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட்டுக் கொள்ளவும் மன்றத்தில் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு.

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.5220 /2016/ எச்1)

தீர்மானம் எண்:- 9 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

10. இந்நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளில் சூரிய ஒளி மின்சார சேமிப்பு அமைப்புகள் (Solar Power System) ஏற்படுத்தும் பணிக்கு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட பட்டியலில் பிடித்தம் செய்த கூடுதல் டேவணித் தொகையினை திரும்ப வழங்குமாறு M/s M.S. Enterprises நிறுவனத்தார் கோரியுள்ளார். மேற்படி வைப்புத் தொகைகள் காலம் கடந்த வைப்பு நிதியில் சேர்ந்துள்ளதால், கீழ்குறிப்பிட்டுள்ள விவரப்படி இத்தொகைகளை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | கூடுதல் வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | இராணி அண்ணாதுரை நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் 3 KVA திறன் கொண்ட Solar Power Plant System அமைத்தல். | 33725/- | M/s M.S.Enterprises |
| 2 | சி.எஸ்.எம். நகராட்சி பள்ளியில் 3KVA திறன் கொண்ட Solar Power Plant | 33725/- | M/s M.S. Enterprises |

| | | | |
|---|---|---|---|
| | System அமைத்தல். | | |
| 3 | ஒலிமுகம்மது பேட்டை நகராட்சி நடுநிலைப் பள்ளியில் 3 KVA திறன் கொண்ட Solar Power Plant System அமைத்தல். | 33725/- | M/s M.S. Enterprises |
| 4 | ஏகாம்பரநாதர் சன்னதி தெரு நகராட்சி நடுநிலைப் பள்ளியில் 2 KVA திறன் கொண்ட Solar Power Plant System அமைத்தல். | 22465/- | M/s M.S. Enterprises |

அலுவலக குறிப்பு
மன்றம் அனுமதி வழங்கலாம். ( ந.க.எண்.39/2019/இ1)

தீர்மானம் எண்:- 10 அனுமதி அளிக்கப்பட்டது.

11. காஞ்சிபுரம் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிப் பணிகள் முன்னேற்றம் குறித்த விவர அறிக்கையினை தினபூமி நாளிதழில் 06.03.2019 அன்று விளம்பரம் செய்தமைக்கு “THINA BOOMI, Chennai-21” அவர்களிடம் இருந்து வரப்பட்டுள்ள விளம்பர செலவினப் பட்டியல் (CGST & SGST வரிகள் உள்பட) தொகை ரூ.21,000/- (ரூபாய் இருபத்தோராயிரம் மட்டும்) ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் (பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.9245/2018/இ1)

தீர்மானம் எண்:- 11 அனுமதி அளிக்கப்பட்டது.

12. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் ஓட்டுநராக பணிபுரியும் திரு.எம்.கார்மேகம் என்பவர் 20 ஆண்டுகள் விபத்துகள் இன்றி மாசற்ற முறையில் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். எனவே, இவருக்கு தங்கபதக்கம் மற்றும் நற்சான்று வழங்க அரசாணை (நிலை) எண்.238 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந4) நாள்.01.10.1997ன்படி நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களின் கடிதம் ந.க.எண்.4980/2018/ஜே3-1 நாள்.01.04.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்திற்கிணங்க திரு.எம்.கார்மேகம் ஓட்டுநர் அவர்களுக்கு தங்கபதக்கம் பெற்று வழங்கவும் அதற்கான விலை மற்றும் தொகை செலுத்துவதற்கான கணக்கு விவரம் The TamilNadu Handicrafts Development Corporation Ltd., Chennai, அவர்களிடம் கோரி பெறவும் 4 கிராம் தங்கபதக்கம் மற்றும் நற்சான்றிதழ்க்காக ஆகும் தோராயன செலவினம் ரூ.25000/-க்கும் மேற்படி அரசு நிறுவனத்திடமிருந்து பெறப்படும் Invoice–படி தொகை செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.13322/2018/எச்1)

தீர்மானம் எண்:- 12 அனுமதி அளிக்கப்பட்டது.

13. காஞ்சிபுரம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள தேவராஜசுவாமி பெருமாள் கோயிலில் 40 வருடங்களுக்கு ஒருமுறை நிகழும் ஆதி அத்திவரதர் வைபவம் 01.07.2019 முதல் 17.08.2019 வரை 48 நாட்கள் நடைபெற உள்ளது. எனவே திருவிழாவில் கலந்துகொள்ள வருகை தரும் பொது மக்களின் நலன் கருதி உரிய பொது சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி பொதுசுகாதாரப் பிரிவுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் (கை கிளவுஸ், முககவசம், முழங்கால் வரையான ஷூ, தொப்பி, பிரதிபலிப்புச் சட்டை, பினாயில், முதலுதவிப் பெட்டி, குளோரினேஷன் மாதிரி எடுக்கும் கருவி, OT திரவம் முதலியன) வாங்கிக் கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.6.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பொது சுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதி மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து வழங்கவும் அதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.4358/2019/எச்1)

தீர்மானம் எண்:- 13 அனுமதி அளிக்கப்பட்டது.

14. காஞ்சிபுரம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள தேவராஜசுவாமி பெருமாள் கோயிலில் 40 வருடங்களுக்கு ஒருமுறை நிகழும் ஆதி அத்திவரதர் வைபவம் 01.07.2019 முதல் 17.08.2019 வரை 48 நாட்கள் நடைபெற உள்ளது. எனவே திருவிழாவில் கலந்துகொள்ள வருகை தரும் பொது மக்களின் நலன் கருதி உரிய பொது சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி பொதுசுகாதாரப் பிரிவுக்கு தேவையான தளவாடப் பொருட்கள் (அன்னக்கூடை, சவுள், தென்னந்துடைப்பம், கைத்தகடு, மண்வெட்டி, முள்கம்பி, கடப்பாறை முதலியன) வாங்கிக் கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.8.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பொது சுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதி மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து வழங்கவும் அதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.4358/2019/எச்1)

தீர்மானம் எண்:- 14 அனுமதி அளிக்கப்பட்டது.

15. காஞ்சிபுரம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள தேவராஜசுவாமி பெருமாள் கோயிலில் 40 வருடங்களுக்கு ஒருமுறை நிகழும் ஆதி அத்திவரதர் வைபவம் 01.07.2019 முதல் 17.08.2019 வரை 48 நாட்கள் நடைபெற உள்ளது. எனவே திருவிழாவில் கலந்துகொள்ள வருகை தரும் பொது மக்களின் நலன் கருதி உரிய பொது சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி பொதுசுகாதாரப் பிரிவுக்கு தேவையான சுண்ணாம்பு பவுடர் வாங்கிக் கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.9.60 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பொது சுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதி மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து வழங்கவும் அதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.4358/2019/எச்1)

*தீர்மானம் எண்:- 15 அனுமதி அளிக்கப்பட்டது.*

16. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் 1961-இல் ஒரிக்கை பாலாறு குடிநீர் திட்டம் மற்றும் 1994 முதல் திருப்பாற்கடல் குடிநீர் அபிவிருத்தி திட்டம் கொண்டு வரப்பட்டு பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இத் திட்டம் தொடங்கப்பட்டு 24 ஆண்டுகள் ஆகின்றது.

காஞ்சிபுரம் பெருநகராட்சியுடன் 01.10.2011 முதல் செவிலிமேடு பேரூராட்சி தேனம்பாக்கம், ஓரிக்கை மற்றும் நத்தப்பேட்டை ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்பட்டு எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகரின் மக்கள் தொகை 2,32,816 ஆகும்.

இந்நிலையில் மேற்படி குடிநீர் திட்டத்தின் மூலம் பெறப்பட்டு வரும் குடிநீர் மக்களின் தேவைக்கு போதுமானதாக இல்லை. இந்நகர் மன்ற தீர்மானம் எண்.578 நாள்.23.02.2015 தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் கூட்டு குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் காஞ்சிபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு சேர்த்து விரிவுபடுத்த அரசிற்கு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலம் பரிந்துரைக்கப்பட்டு உள்ளது.

மேலும் தற்போது பாலாற்று நீர் மட்டம் மிகவும் குறைந்த விட்டதாலும், ஆழ்துளை கிணறுகள் வறண்டு விட்டதாலும் நீர்ணையிக்கப்பட்ட களவுகோல் படியும், தினசரியும் குடிநீர் வழங்க இயலாத நிலை உள்ளது. இந்நிலையில் 40 ஆண்டுகள் ஒருமுறை நடைபெறும் அத்திவரதர் 48 நாட்கள் திருவிழா தற்போது நடைபெற உள்ள நிலையில் இலட்சக்கணக்கான மக்கள் வந்து செல்ல உள்ள நிலையில் அனைவருக்கும் குடிநீர் வழங்க வேண்டி உள்ளது. மீண்டும் காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தில் இருந்து குடிநீர் வழங்கிட காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு பரிந்துரைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற் பொறியாளர், உதவி செயற்பொறியாளர், நகராட்சி ஆணையர் மற்றும் பொறியர் அவர்களால் காவேரி கூட்டு குடிநீர் திட்ட பிரதான குழாய் இணைக்கும் இடம் ஆய்வு செய்யப்பட்டது. அறிவுரைப்படி புதிய குடிநீர் இணைப்பு கோரி விண்ணப்பிக்கவும், இதற்கான கட்டணம் Rs.150 / கிலோ லிட்டர் எனவும் தெரிவிக்கப்பட்டது. இதன்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய காப்பு தொகை, சென்டேஜ் சார்ஜ் மற்றும் பயனீட்டு அளவின்படி செலுத்த வேண்டிய தொகைகளுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு

மன்ற அனுமதி அளிக்கலாம்.

*தீர்மானம் எண்:- 16 அனுமதி அளிக்கப்பட்டது.*

17. இந்நகராட்சி பல்லவன் நகர் பகுதியில் கழிவு நிரேற்று நிலையம் (லிப்ட்டிங் ஸ்டேசன்) 2012-ஆம் ஆண்டு முதல் நகராட்சி பராமரிப்பில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பல்லவன் நகர் பகுதி ஹவுசிங் போர்டு பகுதியில் இருந்து வரும் கழிவுநிர் நீரேற்றம் செய்யப்படுகின்றது. இங்கு 20 H.P. மோட்டார்வுடன் இணைந்த மட்பம்பு 1990-இல் பொருத்தப்பட்டு உள்ளது. தற்போது பழுது ஆகி பழுது நீக்கம் செய்ய இயலாத நிலையினும் உதிரி பாகங்களும் கிடைக்கவில்லை. எனவே 28 ஆண்டு கால தொடர் இயக்கத்தில் பழுது ஆனதற்கு பதில் புதியது பொருத்திட வேண்டியது அவசிமாகிறது. உத்தேச செலவீனம் ரூ.3.60 இலட்சம் ஆகும். மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.4358/2019/எச்1)

*தீர்மானம் எண்:- 17 அனுமதி அளிக்கப்பட்டது.*

18. காஞ்சிபுரம் நகர்புற பகுதிக்கு ஓரிக்கை பாலாறு குடிநீர் திட்டத்தில் இருந்து 4 எம்.எல்.டி. வரை குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இங்கு தலைமை பணியிடத்தில் Automatic dosing motor pump மூலம் லிக்விட் குளோரினேஷன் கலந்து குடிநீர் சுத்திகரிப்பு செய்து பொதுமக்களுக்கு சுகாதாரமான குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி இரண்டு மோட்டார் பம்புகள் 2009-ம் ஆண்டு பொருத்தப்பட்டு தொடர் இயக்கத்தில் இருந்து வருவதால் அடிக்கடி செயல் இழந்து Chlorine கலந்து வழங்குவதில் தடை ஏற்பட்டு வருகின்றது. எனவே அவசியம் கருதி Metering dosing pump with motor 0.5 HP இரண்டு எண்கள் மற்றும் இணைந்தவை புதியது மாற்றி அமைக்க வேண்டி உள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.2.60 இலட்சம் ஆகும். சுகாதாரமான குடிநீர் வழங்கிட மேற்படி பணிகள் செய்து கொள்ளவும், இதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மன்ற அனுமதி எதிர்நோக்கி அவசர அவசியத்தை முன்னிட்டு தனி அலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.5909/இ3/2019)

தீர்மானம் எண்:- 18 அனுமதி அளிக்கப்பட்டது.

19. காஞ்சிபுரம் நகராட்சி புதை வடிகால் திட்டத்தில் பிள்ளையார்பாளையம் பகுதியில் இருந்து வரும் கழிவுநீர் தாயார்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள L.T. பம்பிங் ஸ்டேசனில் இருந்து நீரேற்றம் செய்யப்பட்டு S.T.P.-க்கு அனுப்பப்படுகின்றது. இதில் கடந்த வாரம் கடும் மின் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு மின்வாரிய மின் மாற்றியில் பழுது ஏற்பட்டதன் காரணமாக இயக்கத்தில் இரந்து வந்த இரண்டு 20 HP U.G.D. மோட்டார் பம்பில் பழுது ஏற்பட்டுள்ளது. இவைகள் 2012-ம் ஆண்டில் இருந்து தொடர் இயக்கத்தில் இருந்து வருகின்றது. இதுநாள் வரை எவ்வித பழுது நீக்கமும் செய்யப்படவில்லை. எனவே அவசியம் கருதி இதனை பழுது நீக்கம் செய்திடவும், தேவையான Safety Measures கருவிகள், Sluice, Reflex Valve-கள் மாற்றிக்கொள்ளவும் வேண்டியதாகிறது. இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.50 இலட்சம் ஆகும். மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலக குறிப்பு :-

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.5908/இ3/2019)

தீர்மானம் எண்:- 19 அனுமதி அளிக்கப்பட்டது.

20. காஞ்சிபுரம் நகராட்சியுடன் 25.10.2011 முதல் இணைக்கப்பட்ட செவிலிமேடு பேரூராட்சியிலில் 2008-09 முதல் 2010-11 வரை ஒப்பந்த பணிகள் செய்தமைக்கு செலுத்திய வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரி பார்வையில் கண்டுள்ள திரு.என். சரவணன், ஒப்பந்ததாரரின் விண்ணத்தின்படி, அன்னார் மேற்கொண்ட பணிகள் குறித்து 2008-09 முதல் 2010-11 வரை உள்ள தணிக்கை அறிக்கையினை ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட பட்டியல்படி அன்னாருக்கு வழங்க வேண்டிய தொகை ரூ.3,50,567/- ல் தணிக்கை தடையில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ.49,482/- பிடித்தம் செய்யப்பட்டு மீதம் உள்ள தொகை ரூ.3,01,585/- காலங்கடந்த வைப்புத் தொகை என்பதால் மேற்படி தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | வைப்புத் தொகை பதிவேடு வ.எண். | பணி விவரம் | செலுத்திய / பிடித்தம் செய்யப்பட்ட நாள் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | 184 | பூங்கா சுற்றுச்சுவர் வேலை மற்றும் விளையாட்டு பொருட்கள் ASD 5% | 19.10.2007 | 273 |
| 2 | 187 | **2006–07** நபார்டு திட்டப் பணி | 27.09.2007 | 4050 |
| 3 | 273 | அம்பேத்கர் நகர் - வந்தவாசி சாலை சிமெண்ட் சாலை அமைத்த வைப்புத் தொகை | 26.05.2008 | 2000 |
| 4 | 274 | அம்பேத்கர் நகர் குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் வைப்புத் தொகை | 26.05.2008 | 750 |
| 5 | 275 | அம்பேத்கர் நகர் சிமெண்ட சாலை ஓரம் கிராவல் அமைத்தல் | 26.05.2008 | 360 |
| 6 | 276 | பல்லவன் நகர், காஞ்சி இல்லம் பூங்கா அமைத்தல் வைப்புத் தொகை | 26.05.2008 | 1550 |
| 7 | 279 | செவிலிமேடு - ஜெம் நகர் இணைப்பு தார் சாலை வைப்புத் தொகை | 26.05.2008 | 6500 |
| 8 | 281 | பல்லவன் நகரில் சமுதாயக் கூடம் கட்டுதல் பணிக்கு வைப்புத் தொகை | 26.05.2008 | 15000 |
| 9 | 301 | வைப்புத் தொகை | 15.08.2008 | 6200 |
| 10 | 320 | AMAMT 2008-09 - பல்லவன் நகர் சமுதாயக் கூடம் கட்டும் பணி | 24.10.2008 | 11000 |
| 11 | 321 | AMAMT 2008-09 - பல்லவன் நகர் சமுதாயக் கூடம் கட்டும் பணி | 24.10.2008 | 5500 |
| 12 | 325 | வேதாசலம் நகர் பாரதிதாசன் தெரு மழைநீர் வடிகால்வாய் வைப்புத் தொகை | 10.11.2008 | 900 |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | 326 | குப்பை தரம் பிரிக்கும் கூடம் மற்றும் தடுப்பு அரை அமைத்தல் வைப்புத் தொகை | 10.11.2008 | 7000 |
| 14 | 349 | குருசாமி நகர் பூங்கா வேலை அமைத்தல் | 22.12.2008 | 1350 |
| 15 | 356 | வந்தவாசி சாலை கால்வாய் மற்றும் கழிவுநீர் தூர் வாருதல் வைப்புத் தொகை | 29.12.2008 | 1120 |
| 16 | 357 | பல்லவன் நகர் H 141 to H 160 வரை சிமெண்ட் சாலை அமைத்தல் வைப்புத் தொகை | 29.12.2008 | 3950 |
| 17 | 358 | ஜெம் நகர் சாலை மெட்டல் ல்லை | 29.12.2008 | 1000 |
| 18 | 363 | ஐயப்பா நகர் வ.உ.சி. தெரு மழைநீர் வடிகால்வாய் 5% | 30.12.2008 | 2400 |
| 19 | 364 | ஐயப்பா நகர் வ.உ.சி. தெரு மழைநீர் வடிகால்வாய் | 30.12.2008 | 600 |
| 20 | 365 | 12–வது நிதிக்குழு மான்யம் - பாரதியார் தெரு மழைநீர்வடிகால்வாய் பணி | 30.12.2008 | 3598 |
| 21 | 366 | 12–வது நிதிக்குழு மான்யம் - பாரதியார் தெரு மழைநீர்வடிகால்வாய் பணி ASD 5% | 30.12.2008 | 899 |
| 22 | 371 | கதிர்வேல் தெரு ஜல்லி சாலை அமைத்தல் முன் வைப்புத் தொகை | 05.01.2009 | 1100 |
| 23 | 372 | ஜெம் நகர் பூங்கா அமைத்தல் முன் வைப்புத் தொகை | 05.01.2009 | 2750 |
| 24 | 373 | ஐயப்பா நகர் பூங்கா அமைத்தல் வைப்புத் தொகை | 05.01.2009 | 1050 |
| 25 | 391 | ஜெம்நகர் கல்வெர்ட் கட்டுதல் | 02.03.2009 | 3000 |
| 26 | 392 | ஜெம்நகர் கல்வெர்ட் கட்டுதல் ASD | 02.03.2009 | 1000 |
| 27 | 397 | ஜெம் நகர் பாரதியார் தெரு மெட்டல் சாலை அமைத்தல் | 09.03.2009 | 6500 |
| 29 | 398 | ஜெம் நகர் பாரதியார் தெரு மெட்டல் சாலை அமைத்தல் 5% | 09.03.2009 | 1300 |
| 30 | 399 | ஜெம் நகர் ஓம் விநாயகர் தெரு சாலை மெட்டல் சாலை ASD 5% | 09.03.2009 | 4000 |
| 31 | 400 | ஜெம் நகர் ஓம் விநாயகர் தெரு சாலை மெட்டல் சாலை | 09.03.2009 | 800 |
| 32 | 407 | குருசாமி நகர் பூங்கா முள்வேலி அமைத்தல் EMD 5% | 26.03.2009 | 6750 |
| 33 | 408 | குருசாமி நகர் பூங்கா முள்வேலி அமைத்தல் ASD 5% | 26.03.2009 | 1350 |
| 34 | 420 | TNHB கழிவுநீர் கால்வாய் - மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு எதிரில் மற்றும்தேனம்பாக்கம் ஊராட்சி எல்லை வரை ASD | 06.04.2009 | 5600 |
| 35 | 421 | TNHB கழிவுநீர் கால்வாய் - மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு எதிரில் மற்றும் தேனம்பாக்கம் ஊராட்சி எல்லை வரை ASD 5% | 06.04.2009 | 1200 |
| 36 | 429 | திடக்கழிவு மேலாண்மை திட்டம் - மண்புழு உரம் தயாரிக்கும் கிடங்கு | 09.04.2009 | 18500 |
| 37 | 430 | திடக்கழிவு மேலாண்மை திட்டம் - மண்புழு உரம் தயாரிக்கும் கிடங்கு 5% | 09.04.2009 | 3700 |
| 38 | 431 | பொது நிதி - ஜெம் நகர் மகா விஷ்ணு தெரு மெட்டல் சாலை 5% | 09.04.2009 | 3400 |
| 39 | 432 | பொது நிதி - ஜெம் நகர் மகா விஷ்ணு தெரு மெட்டல் சாலை ASD | 09.04.2009 | 680 |
| 40 | 433 | பொது நிதி - அய்யர் தெரு மெட்டல் சாலை 5% | 09.04.2009 | 4100 |
| 41 | 434 | பொது நிதி - அய்யர் தெரு மெட்டல் சாலை ASD | 09.04.2009 | 820 |
| 42 | 435 | APAMT 2008-09 பல்லவன் நகர் சமுதாயக் கூடம் கட்டுதல் ASD | 06.05.2009 | 4000 |
| 43 | 436 | APAMT 2008-09 பல்லவன் நகர் சமுதாயக் கூடம் கட்டுதல் ASD 5% | 06.05.2009 | 20000 |
| 44 | 437 | பொது நிதி - கதிர்வேல் தெரு ஜல்லி சாலை அமைத்தல் ASD | 07.05.2009 | 1100 |
| 45 | 438 | பொது நிதி - கதிர்வேல் தெரு ஜல்லி சாலை அமைத்தல் ASD 5% | 07.05.2009 | 5500 |
| 46 | 457 | பல்லவர் நகர் H 141 to H 160 சிமெண்ட் சாலை | 29.06.2009 | 19750 |
| 47 | 458 | பல்லவர் நகர் H 141 to H 160 சிமெண்ட் சாலை ASD | 29.06.2009 | 3950 |
| 48 | 462 | 12–வது நிதிக்குழு 2008–09 திடக்கழிவு மேலாண்மை மான்யம் ASD 1% | 16.07.2009 | 3291 |
| 49 | 463 | 12–வது நிதிக்குழு 2008–09 திடக்கழிவு மேலாண்மை மான்யம் ASD 5% | 16.07.2009 | 16456 |
| 50 | 470 | பொது நிதி - காஞ்சி இல்லம் பூங்கா ASD | 11.08.2009 | 7750 |
| 51 | 471 | பொது நிதி - காஞ்சி இல்லம் பூங்கா ASD 1% | 11.08.2009 | 1550 |
| 52 | 477 | பல்லவன் நகர் சமுதாயக்கூடம் கட்டுதல் பணி - முன் வைப்புத் தொகை | 10.08.2009 | 7500 |
| 53 | 478 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஓரங்கள் மினி பவர் பம்பு பழுது பார்த்தல் வைப்புத் தொகை | 02.07.2009 | 3900 |
| 54 | 479 | முள்ளுக்குட்டை தெரு பாதாள சாக்கடை பைப் லைன் மாற்றி அமைத்தல் வைப்புத் தொகை | 02.07.2009 | 1000 |
| 55 | 488 | ஜெம் நகர் பூங்கா மேம்பாடு ASD 1% | 16.09.2009 | 2750 |
| 56 | 489 | ஜெம் நகர் பூங்கா மேம்பாடு 5 % | 16.09.2009 | 13750 |
| 57 | 497 | வைப்புத் தொகை | 26.10.2009 | 1700 |
| 58 | 514 | திருப்பூர் குமரன் மற்றும் அருணாச்சலம் நகர் மெட்டல் சாலை அமைத்தல் EMD வைப்புத் தொகை | 19.11.2009 | 3650 |
| 59 | 530 | கன்னிகாபுரம் குடிசை பகுதி சிமெண்ட் சாலை வைப்புத் தொகை | 05.01.2010 | 4000 |
| 60 | 550 | கன்னிகாபுரம் சிமெண்ட் சாலை ASD 5% | 26.02.2010 | 16000 |
| 61 | 558 | வைப்புத் தொகை | 23.03.2010 | 1400 |
| 62 | 560 | கன்னிகாபுரம் குறுக்குத் தெரு மற்றும் பெரிய தெரு குறுக்கு சிமெண்ட் சாலை வைப்புத் தொகை | 23.03.2010 | 2550 |
| 63 | 575 | திருப்பருத்திக்குன்றம் கால்வாய் ராகவேந்திரா நகரில் கால்வாய் அமைத்தல் முன் வைப்புத் தொகை | 18.08.2010 | 4000 |
| 64 | 585 | காஞ்சி இல்லம் குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் வைப்புத் தொகை | 29.11.2010 | 1570 |
| 65 | 588 | பல்லவன் நகர் பூங்கா கூடுதல் பணிகள் - வைப்புத் தொகை | 29.11.2010 | 2600 |
| 66 | 590 | அண்ணா சிலை சிறுவேலை - வைப்புத் தொகை | 02.12.2010 | 500 |

| | | | | |
|---|---|---|---|---|
| 67 | 592 | மரம் ஏலம் எடுக்க வைப்புத் தொகை | 02.12.2010 | 500 |
| 68 | 594 | பழைய இரும்பு வைப்புத் தொகை | 02.12.2010 | 500 |
| 69 | 623 | பொது நிதி M-188 to M 140 வரை சிமெண்ட் சாலை EMD | 29.12.2010 | 3050 |
| 70 | 624 | பொது நிதி - ஜெம் நகர் மற்றும் சோமசுந்தரம் நகர் சிறுபாலம் அமைத்தல் EMD | 29.12.2010 | 1950 |
| 71 | 625 | பொது நிதி - எல்லப்பா நகர் பூங்கா கூடுதல் பணிகள் EMD | 29.12.2010 | 2150 |
| 72 | 626 | பொது நிதி - வேதாசலம் நகர் - பாரதிதாசன் தெரு பூங்கா மேம்பாடு செய்தல் EMD | 29.12.2010 | 4000 |
| 73 | 637 | ஜெம் நகர் சோமசுந்தரம் நகர் சிறுபாலம் அமைத்தல் ASD 5% - GF | 11.04.2011 | 7800 |
| 74 | 664 | பொது நிதி **2010–11 –** பல்லவன் நகர் M-188 to M 140 வரை சிமெண்ட் சாலை ASD 5% | 17.02.2011 | 12200 |
| 75 | 677 | பாரதியார் தெரு சிமெண்ட் சாலை | 30.03.2011 | 16000 |
| 76 | 680 | எல்லப்பா நகர் பூங்கா | 30.03.2011 | 8600 |
| | | | | 3,50,567 |
| | | தணிக்கையில் பிடித்தம் செய்ய வேண்டிய தொகை | | 49,482 |
| | | வழங்க வேண்டிய தொகை | | 3,01,085 |

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதி அளிக்கலாம். ‘

(ந.க.எண்.5602/2019/சி3)

தீர்மானம் எண்:- 20 அனுமதி அளிக்கப்பட்டது.

21. காஞ்சிபுரம் பெருநகராட்சி பகுதியில் அமைந்துள்ள தேவராஜசுவாமி பெருமாள் கோயிலில் 40 வருடங்களுக்கு ஒருமுறை நிகழும் ஆதி அத்திவரதர் வைபவம் 01.07.2019 முதல் 17.08.2019 வரை 48 நாட்கள் நடைபெற உள்ளது. எனவே திருவிழாவில் கலந்துகொள்ள வருகை தரும் பொது மக்களின் நலன் கருதி உரிய பொது சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி பொதுசுகாதாரப் பிரிவுக்கு தேவையான பிளீச்சிங் பவுடர் வாங்கிக் கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.9.60 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

பொது சுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதி மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து வழங்கவும் அதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.4358/2019/எச்1)

தீர்மானம் எண்:- 21 அனுமதி அளிக்கப்பட்டது.

22. காஞ்சிபுரம் பெருநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன்படி இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை விதிகளின் கொள்கை மற்றும் செயல்திட்ட அறிக்கையை அமுல்படுத்துதல் குறித்த அறிக்கையினை காஞ்சிபுரம் மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கு அனுமதியும் மேற்படி அரசிதழில் வெளியிடுவதற்கு ஆகும் செலவினம் ரூ.80,000/- பொது நிதியிலிருந்து செலவிட்டுக் கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு.

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1676/2019/எச்1)

தீர்மானம் எண்:- 22 அனுமதி அளிக்கப்பட்டது.

23. காஞ்சிபுரம் நகரத்தில் நடைபெற உள்ள அத்திவரதர் வைபவத்திற்கு தினசரி 20 முதல் 50 லட்சம் வரை பொதுமக்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே திருவீதிப்பள்ளத்தில் அமைந்துள்ள நத்தப்பேட்டை குப்பைக் கிடங்கை சுத்தம் செய்து அதை Gravel கொண்டு சமன்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப்பட்ட அறிவுரையின்படி மேற்படி குப்பைக் கிடங்கில் Gravel கொண்டு சமன்படுத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.70 இலட்சத்துக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்:- 23 அனுமதி அளிக்கப்பட்டது.

24. இந்நகராட்சியில் குடிநீர் இணைப்பு பெற்று பயன்படுத்திவந்த கீழ்கண்ட பயனாளி தனது வீட்டு குடிநீர் இணைப்பினை துண்டிக்க வேண்டி 28.04.2014-ல் விண்ணப்பித்துள்ளார்.

| வ. எண் | பெயர் | முகவரி | குடிநீர் இணைப்பு எண் |
|---|---|---|---|
| 1 | திருமதி.D. மீனாட்சியம்மாள் | 16B, நடுத்தெரு, பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம் | 008/2517<br>008/015/00059 |

மேற்படி விண்ணப்பதாரர் மார்ச் 2014 வரை குடிநீர் கட்டணங்களை நிலுவையின்றி செலுத்தியதை தொடர்ந்து 05.03.2015ல் குடிநீர் இணைப்பு துண்டிப்பும் செய்யப்பட்டுள்ளது. ஆனால் நாளது வரை மேற்படி இணைப்பிற்கான குடிநீர் கட்டண கேட்பு கணினியில் நீக்கம் செய்யாமல் உள்ளது. எனவே மேற்படி குடிநீர் இணைப்பிற்கான கேட்பினை கணினி கேட்பிலிருந்து நீக்கம் செய்யவும், நாளது நிலுவையாக உள்ள தொகை ரூ.3600/- ஐ தள்ளுபடி செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.5293/2019/இ3)

தீர்மானம் எண்:- 24 அனுமதி அளிக்கப்பட்டது.

25. இந்நகராட்சியில் குடிநீர் இணைப்பு பெற்று பயன்படுத்திவந்த கீழ்கண்ட பயனாளி தனது வீட்டு குடிநீர் இணைப்பினை துண்டிக்க வேண்டி 22.02.2015-ல் விண்ணப்பித்துள்ளார்.

| வ. எண் | பெயர் | முகவரி | குடிநீர் இணைப்பு எண் |
|---|---|---|---|
| 1 | திரு.M. சிவக்கொழுந்து | 11B/1, நடுத்தெரு, பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம் | 008/2512<br>008/015/00054 |

மேற்படி விண்ணப்பதாரர் மார்ச் 2014 வரை குடிநீர் கட்டணங்களை நிலுவையின்றி செலுத்தியதை தொடர்ந்து 05.03.2015ல் குடிநீர் இணைப்பு துண்டிப்பும் செய்யப்பட்டுள்ளது. ஆனால் நாளது வரை மேற்படி இணைப்பிற்கான குடிநீர் கட்டண கேட்பு கணினியில் நீக்கம் செய்யாமல் உள்ளது. எனவே மேற்படி குடிநீர் இணைப்பிற்கான கேட்பினை கணினி கேட்பிலிருந்து நீக்கம் செய்யவும், நாளது நிலுவையாக உள்ள தொகை ரூ.3600/- ஐ தள்ளுபடி செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.5294/2019/இ3)

தீர்மானம் எண்:- 25 அனுமதி அளிக்கப்பட்டது.

26. இந்நகராட்சியில் வணிக உபயோகத்திற்காக புதைவடிகால் இணைப்பு பெற்று பயன்படுத்திவந்த கீழ்கண்ட பயனாளிகள் தங்களது வணிக புதை வடிகால் இணைப்பினை குடியிருப்பு பயன்பாடாக மாற்ற வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

| வ. எண் | பெயர் | முகவரி | புதைவடிகால் இணைப்பு எண் |
|---|---|---|---|
| 1 | I. மனோரஞ்சிதம் | No.89, புதுபாளையம் தெரு, பிள்ளையார்பாளையம், | 008/15321 |

| | | | |
|---|---|---|---|
| | | காஞ்சிபுரம். | |
| 2 | S. ராமமூர்த்தி | No.10A/2, வணிகர் தெரு, காஞ்சிபுரம். | 008/17026 |
| 3 | மீனாட்சியம்மாள் W/o ஏகாம்பரம் | No.10C மண்டபம் தெரு, பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம். | 008/15389 |

மேற்படி விண்ணப்பதாரர் கோரிக்கையின்படி நேரில் சென்று ஆய்வு செய்து உறுதி செய்யப்பட்டது. மேலும் மார்ச் 2019 வரை புதைவடிகால் கட்டணங்களை நிலுவையின்றி செலுத்தியுள்ளார். எனவே மேற்படி புதைவடிகால் இணைப்பை வணிக உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகமாக மாற்றி கணினி கேட்பில் திருத்தம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்:4435/2019/ E4)

தீர்மானம் எண்:- 26 அனுமதி அளிக்கப்பட்டது.

27. காஞ்சிபுரம் பொதுசுகாதாரப் பிரிவில் செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி சேகரமாகும் திடக்கழிவுகளை தரம் பிரித்து உரக்கிடங்குக்கு அளிக்கவும், பொதுசுகாதார லாரிகளுக்கு பணியாளர்களை அனுப்பவும் ஏற்கனவே உபயோகத்தில் உள்ள நிரந்தரப் பணியாளர்கள் எண்ணிக்கை குறைவாக உள்ளதை கருத்தில் கொண்டு 51 வார்டு பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை விதிகளின் கீழ் முதல் நிலை குப்பை சேகரித்தல் பணிகளை தனியார் ஒப்பந்த நிறுவனங்களிடமிருந்து தற்காலிகமாக துப்புரவு பணியாளர்களை பெற்று மேற்கொள்ள நகரமன்றத்தின் தீர்மான எண்.277 நாள். 28.9.2018 ல் ஒப்புதல் பெறப்பட்டு அதனடிப்படையில் 20.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1) M/S Green Warrior, No. 14, 4th Street, K.K.Nagar, Manavalan Nagar, Thiruvallur – 602 002

2) M/S City Clean, No. 124 / 148-5, Mettu Street, Ayanavaram, Chennai -600 023.

3) M/S SS Engineers, No 3/6 Kamadeena nagar, Vadavalli 641041

மேற்கண்டுள்ள ஒப்பந்த நிறுவனங்களில் ஒப்பந்தப்புள்ளிகளை 20.11.2018 அன்று திறக்கப்பட்டு 1 மற்றும் 2 மட்டுமே தொழில்நுட்ப தகுதியினை ஆய்வு செய்து மேற்படி நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதை தொடர்ந்து 26.11.2018 அன்று விலைப்புள்ளி உறையினை (Finance Bid) திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு தீர்மானம் எண் 410 நாள்30.11.2018ன் படி M/S City Clean, Ayanavaram, Chennai -600 023. நிறுவனத்திற்கு LOA அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை தொடர்ந்து வ.எண்.3-ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் M/S. SS Engineers, No 3/6 Kamadenu Nagar, Vadavalli 641041 அவர்கள் தாங்களும் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொண்டுள்ளதாகவும் ஆனால் அன்றைய தினத்தன்று தங்களது ஒப்பந்தப்புள்ளி பரிசீலிக்கப்படவில்லை எனவும் தெரிவித்து தங்களின் ஒப்பந்தப்புள்ளியினையும் பரிசீலிக்க வேண்டி 10.12.2018 அன்றைய தேதிய கடிதத்தில் கோரப்பட்டதை தொடர்ந்து அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதியினை ஆய்வு செய்து மேற்படி நிறுவனமும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது. எனவே மேற்படி நிறுவனத்தாரின் விலைப்புள்ளி உறையினை (Finance Bid) திறக்கப்பட்டு 3 நிறுவனங்களின் விலைப்புள்ளியினை ஒப்புநோக்கு செய்யப்பட்டதின் விவரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | டெண்டர் வழங்கியுள்ள நிறுவனங்கள் மற்றும் விலை விவரம் | | |
|---|---|---|---|---|
| | | M/S City Clean, Ayanavaram, Chennai – 600 023. | M/S Green Warrior, Thiruvallur – 602 002 | M/S SS Engineers, Vadavalli –641 041 |
| 1 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரப் பகுதியில் சேகரமாகும் குப்பைகளை சேகரித்தல், தரம் பிரித்தல் மற்றும் உரக்கிடங்குகளுக்கு கொண்டு சேகரித்தல் பணிக்கு தினக்கூலி அடிப்படையில் 350 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் அனுப்புதல். | நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.529/- (முதல் வருட நிர்வாக செலவினத் தொகை உட்பட) | நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.535/ - (முதல் வருட நிர்வாக செலவினத் தொகை உட்பட) | நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.510/- (முதல் வருட நிர்வாக செலவினத் தொகை உட்பட) |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் **M/S SS Engineers, Vadavalli – 641041** நிறுவனம் மதிப்பீட்டு விகிதத்தினை விட குறைவாக விலை விவரம் அளித்துள்ளார்கள். எனவே மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு.

1. நகரமன்றத்தின் தீர்மான எண்.410 நாள். 31.11.2018யை ரத்து செய்து M/S City Clean, Ayanavaram, Chennai -600 023. LOA அளிக்கப்பட்டதை ரத்து செய்ய அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்டவாறு பெறப்பட்டுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். **M/S SS Engineers, Vadavalli – 641 041** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்கண்ட பணிக்காக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகையுடன் சேவைக் கட்டணமாக 5% நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தின்படி கூடுதலாக வழங்கவும், அதற்கான உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 3001 / 2017 / எச்1)

28. காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட 48-வது வார்டு எம்.ஜி.ஆர். நகர், திருவள்ளுவர் தெருவில் உள்ள மின் மோட்டார் அறையானது பல ஆண்டுகளாக பயன்பாடின்றி பழுதடைந்துள்ளது. எனவே பொது மக்களுக்கு அச்சுறுத்தலாகவும், போக்குவரத்திற்கு இடையூராகவும் உள்ளதால் அக்கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.5267/2019/இ3)

தீர்மானம் எண்:- 29 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

29. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் பொது நிதியின்கீழ் கீழ்க்காணும் பணியினை மேற்கொள்ள 19.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) | ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு / திருமதி / M/s | ஒப்பந்த சதவீதம் மதிப்பீட்டிற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | வார்டு எண்.9–க்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு காமாட்சியம்மன் சன்னதி தெரு மற்றும் மாட வீதிகளில் புராதன நகர மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தானியங்கி தூண்கள் (Automatic Bollards) அமைக்கும் பணிக்கு தானியங்கி தூண்களை அமைக்க சிமெண்ட் கான்கிரீட் தளங்கள் / மேடைகள் அமைத்தல் மற்றும் மின் சாதன அமைப்பு ஏற்படுத்தும் பணி | 9.00 | P. விஜயரகுநாதன் | - | 0.08% |
| | | | G. லட்சுமி | 0.16% | - |

அலுவலக குறிப்பு :-

1. மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.39/2019/இ1)

தீர்மானம் எண்:- 29 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

30. காஞ்சிபுரம் நகராட்சி பொறியியல் பிரிவில் பொறியாளரின் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்பு பதிவெண் TN 21 AE 1554 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து புதுப்பிக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்படி பணிகளை செய்வதற்கும், அதற்காக ஆகும் தோராய செலவினத்திற்கும், மதிப்பீடு தொகை ரூ.60,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2248/2019/இ2)

தீர்மானம் எண்:- 30 அனுமதி அளிக்கப்பட்டது.

நகராட்சி அலுவலகம். (ஒம்) கா. மகேந்திரன்
காஞ்சிபுரம். தனி அலுவலர்,
நாள்:- 31.05.2019. காஞ்சிபுரம் பெருநகராட்சி.

// உண்மை நகல்//

ஆணையர்,
காஞ்சிபுரம் பெருநகராட்சி.